***மத்திய அரசின் முதன்மை செயலர் வேளாண் பல்கலையின் ஆய்வு வசதிகளை பார்வையிட்டார்***

*மத்திய அரசின் , உணவு பதபடுத்துதல் அமைச்சகத்தின் முதன்மை செயலர் திரு ரங்லால் ஜமூடா IAS, அவர்கள் மூன்று நாள் பயணமாக தமிழகத்தின் பல்வேறு இடங்களை பார்வையிட்டு, பயணத்தின் கடைசி நாளான இன்று, தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகத்திற்கு வருகை தந்து, பல்கலையின் பல்வேறு ஆய்வு வசதிகளை நேரில் பார்வையிட்டார்*

*பல்கலையின் துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி அவர்கள், செயலரை வரவேற்று, பல்கலை கழகத்தின் , நெல் இனவிருத்தி ஆய்வு மையம், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை விளக்கத்திடல் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் முக்கிய ஆய்வு பணிகளை குறித்து விளக்கினார்.*

*முதன்மை செயலர் ஜமூடா அவர்கள் பல்கலையின் ஆய்வு வசதிகள் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேலும் மேம்படுத்தவும், மாணவர்களுக்கு ஆய்வின் மீதான ஆர்வத்தை தூண்டும் வகையிலும் ஆய்வுத்திட்டங்களை முன்வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.*

*நிகழ்ச்சியின் போது, ஆராய்ச்சி இயக்குநர், முனைவர் மகேஷ்வரன், பயிர் இனபெருக்க மைய இயக்குநர் முனைவர் கணேஷமூர்த்தி, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மைய தலைவர் முனைவர் வரதராஜன் மற்றும் நெல் இனபெருக்க மையத்தலைவர் முனைவர் ராபின் ஆகியோர் உடனிருந்தனர்.*






POST HARVEST TECHNOLOGY CENTRE
FOOD TESTING LABORATO
Analysis of food for
Constituents
Contaminants
Microbes
Additives
Adulterants
POST HARVEST TECHNOLOGY CENTRE, AGRICULTURAL ENGINEERING COLLEGE & RESEAR
TAMIL NADU AGRICULTURAL UNIVERSITY
COIMBATORE
TNAU-AHRD-WORLD BANK PROJECT
AGRICULTURAL INFORMATION TECHNOLOGY CENTRE
DECLARED OPEN BY
Prof. Dr.S.KANNAIYAN,Ph.D.,
VICE-CHANCELLOR
ON 15th AUGUST, 2001
Dr.V.V.SREE NARAYANAN
NODAL OFFICER
Er.M.MOHAMMAD HUZAIN SAIT
ESTATE OFFICER